**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 15.09.2023**

| | |
|---|---|
| **Name : கலையரசன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பி.என்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.01.2021 ம் தேதி சுமார் 4 மணியளவில் கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு உட்பட்ட சின்னையரெட்டிதெரு கருமலைக்கூடல் முகவரியைச்சேர்ந்த மாரியப்பன்மகன் கிருஷ்ண மூர்த்தி (எ) குருவி அவரை கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் பல்வேறு நகை திருட்டு சம்மந்தமாக போலிஸ் கஷ்டடி எடுத்த விசாரித்தபோது, மாலை 5 மணியளவில் நானும், எனது உதவியாளர் சாந்திமேரி அவர்கள் முன்னிலையில் கிருஷ்ண மூர்த்தி (எ) குருவி வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் என்முன்னிலையிலும், சாந்திமேரி முன்னிலையிலும் சொல்லப்பட்டது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1 வது கையெழுத்து **அ.சா.ஆ. 3** ஆகும்.

2) அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட கடந்த 21.01.2021-ம் தேதி மாலை 5 மணிக்கு சின்னையரெட்டிதெரு கருமலைக்கூடல் முகவரியில் அவரது ஓட்டு வீட்டில் பின்புறத்தில் சொருகி வைத்திருந்த உருக்கி வைக்கப்பட்ட தங்ககட்டி ஒன்றை என்

முன்னிலையிலும், சாந்திமேரி முன்னிலையிலும் எடுத்து காவல் துறையிடம் ஒப்படைத்தார். என் முன்னிலையிலும், சாந்திமேரி முன்னிலையிலும் போலிசார் தங்ககட்டியை கைபற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தனர். கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். கைபற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து **அ.சா.ஆ.4.** ஆகும்.

3) ஆஜர் எதிரிதான் மேற்சொன்ன தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

4) நான் எவ்வளவு நாளாக விஏஓவாக உள்ளேன் என்றால் 8 வருடமாக உள்ளேன். நான் 50 க்கு மேற்பட்ட வழக்குகளில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு எப்படி அழைத்தார்கள் என்றால் 21.01.2021–ம் தேதி போன் மூலமாக போலிசார் வரச்சொன்னதன் பேரில் நானும், உதவியாளரும் சென்றோம். நாங்கள் செல்லும் போது நேரம் 5 – 6 என்றால் சரிதான்.

5) நான் செல்லும் போதே 3 எதிரிகளை கஷ்டடி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அதில் கிருஷ்ணமூர்த்தியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர், மற்ற எதிரிகளிடம் பெறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது 1 நேரம் நடந்தது என்றால் சரிதான். அதன் பிறகு சம்பவயிடம் போலிசார் வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான்.

6) நாங்கள் எதிரியின் வீட்டின் வெளியில் நின்றிருந்தேம் என்றால் சரிதான். அது என்ன வகையான வீடு என்றால் தற்போது நினைவில்லை. போலிசார் உள்ளே சென்று வீட்டின்பின்புறத்தில் இருந்து ஆஜர் செய்ததாக சொன்னாகள் என்றால் சரிதான். எந்த இடத்தில் இருந்து எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் காவல் நிலையத்தில் செய்தோம். திரும்ப நாங்கள் போலிசார் வாகனத்திலேயே வந்துவிட்டோம் என்றால் சரிதான். எதிரியின் வீட்டில் நகை எடுத்து ஆஜர் செய்தபோது, அந்த நிகழ்வை வீடியோ எடுத்தார்களா என்றால் இல்லை. போலிசாரும் எடுக்கவில்லை. தங்கட்டியின் எடையை எங்கள் முன்னால் போடவில்லை என்றால் சரிதான்.

8) நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதற்காக அவர்கள் போட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/-தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**

## DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 120/2022**

**Prosecution witness : அ.சா.7** **Date : 15.09.2023**

| | |
|---|---|
| **Name : சாந்திமேரி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 2 present. ) (Accused 1, 3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது பி.என்பட்டி கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.01.2021 ம் தேதி சுமார் 4 மணியளவில் கருமலைக்கூடல் காவல் நிலையத்திற்கு உட்பட்ட சின்னையரெட்டிதெரு கருமலைக்கூடல் முகவரியைச்சேர்ந்த மாரியப்பன்மகன் கிருஷ்ண மூர்த்தி (எ) குருவி அவரை கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் பல்வேறு நகை திருட்டு சம்மந்தமாக போலிஸ் கஷ்டடி எடுத்த விசாரித்தபோது, மாலை 5 மணியளவில் நானும், எனது வீஓஓவும் அவர்கள் முன்னிலையில் கிருஷ்ண மூர்த்தி (எ) குருவி வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் என் முன்னிலையிலும், விஏஓ முன்னிலையிலும் சொல்லப்பட்டது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது கையெழுத்து **அ.சா.ஆ. 5** ஆகும்.

2) அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்ட கடந்த 21.01.2021–ம் தேதி மாலை 5 மணிக்கு சின்னையரெட்டிதெரு கருமலைக்கூடல் முகவரியில் அவரது ஒட்டு வீட்டில் பின்புறத்தில் சொருகி வைத்திருந்த உருக்கி வைக்கப்பட்ட தங்ககட்டி ஒன்றை என்

முன்னிலையிலும், விஏஓ முன்னிலையிலும் எடுத்து காவல் துறையிடம் ஒப்படைத்தார். என் முன்னிலையிலும், விஏஓ முன்னிலையிலும் போலிசார் தங்ககட்டியை கைபற்றி கைபற்றுதல் மகசர் தயார் செய்தனர். கைபற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். கைபற்றுதல் மகசரில் உள்ள 2வது கையெழுத்து **அ.சா.ஆ.6** ஆகும்.

3) ஆஜர் எதிரிதான் மேற்சொன்ன தேதியன்று காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று சாட்சி அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

4) நான் எவ்வளவு நாளாக உதவியாளராக உள்ளேன் என்றால் 9 வருடமாக உள்ளேன். நான் 60 க்கு மேற்பட்ட வழக்குகளில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு எப்படி அழைத்தார்கள் என்றால் போலிசார் அலுவலகம் வந்து நேரில் அழைத்தனர். போலிசார் வரச்சொன்னதன் பேரில் நானும், உதவியாளரும் சென்றோம். நாங்கள் செல்லும் போது நேரம் 5 – 6 என்றால் சரிதான்.

5) நான் செல்லும் போதே 3 எதிரிகளை கஷ்டடி வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். அதில் கிருஷ்ணமூர்த்தியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர், மற்ற எதிரிகளிடம் பெறவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் என்றால் தெரியாது. விஏஓ சொன்னதன் பேரில் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு சம்பவயிடம் போலிசார் வாகனத்தில் சென்றோம் என்றால் சரிதான்.

6) நாங்கள் எதிரியின் வீட்டின் வெளியில் நின்றிருந்தேம் என்றால் சரிதான். போலிசார் உள்ளே சென்று வீட்டின்பின்புறத்தில் இருந்து ஆஜர் செய்ததாக சொன்னாகள் என்றால் சரிதான். திரும்ப நாங்கள் போலிசார் வாகனத்திலேயே வந்துவிட்டோம் என்றால் சரிதான். அதன் பிறகு சேலம் பொன்னம்மா

பேட்டைக்கு சென்றோம். அங்கே போலிசார் ஒரு நகைகடைகாரரிடம் தங்ககட்டியை பறிமுதல் செய்தார்கள். பிறகு காவல் நிலையம வந்து 3 எதிரிகளை இறக்கிவிட்டுவிட்டு இரவு 9 மணிக்கு எங்களை அலுவலகத்தில் இறக்கிவிட்டார்கள் என்றால் சரிதான்.

7) நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், போலிசாரின் கையிருப்பு சாட்சி என்பதற்காக அவர்கள் போட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/—தே.மயில்சாமி,
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டுர்.**